ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 5.10 – தீதறு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 5.10 – தீதறு

‡ தீதறு நிலத்தொடெரி காலினொடு ⋆
நீர் கெழு விசும்பும் அவையாய் ⋆
மாசறு மனத்தினொடுறக்கமொடிறக்கை ⋆
அவையாய பெருமான் ⋆
தாய் செற உளைந்து தயிர் உண்டு குடம் ஆடு ⋆
தட மார்வர் தகை சேர் ⋆
நாதன் உறைகின்ற நகர் ⋆
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே ॥ **5.10.1** ॥

உய்யும் வகை உண்டு சொன செய்யில் ⋆
உலகேழும் ஒழியாமை முன நாள் ⋆
மெய்யின் அளவே அமுது செய்ய வல ⋆
ஐயன் அவன் மேவு நகர் தான் ⋆
மைய வரி வண்டு மது உண்டு கிளையோடு ⋆
மலர் கிண்டி அதன் மேல் ⋆
நைவளம் நவிற்று பொழில் ⋆
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே ॥ **5.10.2** ॥

உம்பர் உலகேழு கடல் ஏழு மலை ஏழும் ⋆
ஒழியாமை முன நாள் ⋆
தம் பொன் வயிறார் அளவும் உண்டவை உமிழ்ந்த ⋆
தட மார்வர் தகை சேர் ⋆
வம்பு மலர்கின்ற பொழில் ⋆

பைம் பொன் வரு தும்பி மணி கங்குல் வயல் சூழ் ⋆
நம்பன் உறைகின்ற நகர் ⋆
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே ॥ **5.10.3** ॥

பிறையின் ஒளி எயிறிலக முறுகி எதிர் பொருதும் என ⋆
வந்த அசுரர் ⋆
இறைகள் அவை நெறு நெறென வெறிய அவர் வயிறழல ⋆
நின்ற பெருமான் ⋆
சிறை கொள் மயில் குயில் பயில மலர்கள் உக அளி முரல ⋆
அடி கொள் நெடு மா ⋆
நறை செய் பொழில் மழை தவழும் ⋆
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே ॥ **5.10.4** ॥

மூள எரி சிந்தி முனிவெய்தி அமர் செய்தும் என ⋆
வந்த அசுரர் ⋆
தோளும் அவர் தாளும் முடியோடு பொடி ஆக ⋆
நொடி ஆம் அளவெய்தான் ⋆
வாளும் வரி வில்லும் வளை ஆழி கதை சங்கம் இவை ⋆
அங்கை உடையான் ⋆
நாளும் உறைகின்ற நகர் ⋆
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே ॥ **5.10.5** ॥

தம்பியொடு தாம் ஒருவர் தன் துணைவி காதல் ⋆
துணை ஆக முன நாள் ⋆
வெம்பி எரி கானகம் உலாவும் அவர் தாம் ⋆
இனிது மேவு நகர் தான் ⋆
கொம்பு குதி கொண்டு குயில் கூவ மயில் ஆலும் ⋆
எழில் ஆர் புறவு சேர் ⋆

நம்பி உறைகின்ற நகர் ⋆
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே ॥ **5.10.6** ॥

தந்தை மனம் உந்து துயர் நந்த இருள் வந்த விறல் ⋆
நந்தன் மதலை ⋆
எந்தை இவன் என்றமரர் கந்த மலர் கொண்டு தொழ ⋆
நின்ற நகர் தான் ⋆
மந்த முழவோசை மழை ஆக எழு கார் ⋆
மயில்கள் ஆடு பொழில் சூழ் ⋆
நந்தி பணி செய்த நகர் ⋆
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே ॥ **5.10.7** ॥

எண்ணில் நினைவெய்தி இனி இல்லை இறை என்று ⋆
முனியாளர் திரு ஆர் ⋆
பண்ணில் மலி கீதமொடு பாடி அவர் ஆடலொடு ⋆
கூட எழில் ஆர் ⋆
மண்ணில் இது போல நகர் இல்லை என ⋆
வானவர்கள் தாம் மலர்கள் தூய் ⋆
நண்ணி உறைகின்ற நகர் ⋆
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே ॥ **5.10.8** ॥

வங்க மலி பௌவம் அது மா முகடின் உச்சி புக ⋆
மிக்க பெருநீர் ⋆
அங்கம் அழியார் அவனதாணை தலை சூடும் ⋆
அடியார் அறிதியேல் ⋆
பொங்கு புனல் உந்து மணி கங்குல் இருள் சீறும் ஒளி ⋆
எங்கும் உளதால் ⋆

நங்கள் பெருமான் உறையும் ⋆
நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே ॥ **5.10.9** ॥

‡ நறை செய் பொழில் மழை தவழும் ⋆
நந்திபுர விண்ணகரம் நண்ணி உறையும் ⋆
உறை கொள் புகர் ஆழி சுரி சங்கம் அவை ⋆
அங்கை உடையானை ⋆
ஒளி சேர் கறை வளரும் வேல் வல்ல ⋆
கலியன் ஒலி மாலை இவை ஐந்தும் ஐந்தும் ⋆
முறையின் இவை பயில வல அடியவர்கள் கொடு வினைகள் ⋆
முழுதகலுமே ॥ **5.10.10** ॥

அடிவரவு — தீது உய்யும் உம்பர் பிறை மூள தம்பியொடு தந்தை எண்ணில் வங்கம் நறைசெய் வண்டு

தீதறு முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்